# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

## உதவி அமர்வு நீதிமன்றம், பொள்ளாச்சி

| | | | |
|---|---|---|---|
| **அமர்வு வழக்கு எண்.** | **234/2023** | **அரசு தரப்பு** | **அ.சா.5** |
| **பெயர்** | **சண்முகம்** | **தந்தை பெயர்** | **ராஜகோபால்** |
| **வயது** | **49** | **முகவரி** | **வால்பாறை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 16th day of February 2026.

**(இன்று விசாரணைக்கு எதிரிகள் 2, 3 ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் வால்பாறையில் குடியிருந்து வருகிறேன். நான் வால்பாறையில் பர்னிச்சர் கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் 2, 3 எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு சம்பவத்தை பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது, ஆனால் கேள்விபட்டேன். கடையை அடைக்க சொன்னார்கள் என்றும், அடைக்காத காரணத்தினால் கற்களை எடுத்து கண்ணாடியை உடைத்ததாக கேள்விபட்டேன், என்னுடைய கடை சம்பவம் நடத்த இடத்தில் இருந்து சுமார் 20 கடை தள்ளி உள்ளது. நான் நடந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து ஏன்னுடையதா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி